**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**OS 135/2016**

**03.10.2023**

**வா.சா.1 தனபால் த/பெ. ஆறுமுகம் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

எனது வீட்டிற்கும் பிரதிவாதிக்கும் இடையே தெருவில் இருந்து கிழக்கு இருந்து மேற்காக காம்பவுண்ட் உள்ளது. அது ரெடிமேட் காம்பவுண்ட். அந்த காம்பவுண்ட் சுவரானது 25 வருடங்களாக உள்ளதா என்றால் தவறு. அந்த காம்பவுண்ட் ஆனது 25.02.2013 க்கு பிறகு வைக்கப்பட்டது. அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளதா என்றால் எழுத்துபூர்வமாக இல்லை. அந்த காம்பவுண்ட் வைத்தவுடன் திருவாரூர் எஸ்.பி அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளேன். உள்ளூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்காமல் ஏன் எஸ்.பி அலுவலகத்தில் சென்று புகார் அளித்துள்ளீர்கள் என்றால் அதற்கு காரணமில்லை. புகார் கொடுத்த சம்பந்தமாக எந்தவித குறிப்புகளும் என்னுடைய வழக்குரையில் இல்லை. காம்பவுண்ட் வைத்ததற்கான புகைப்படங்கள் ஏதும் எடுத்தீர்களா என்றால் இல்லை. பிரதிவாதி காம்பவுண்ட் வைக்கவில்லை என்றும், அவர் ஆக்ரமிப்பு செய்யவில்லை என்றும் அவருக்கு விற்றவர் தான் காம்பவுண்ட் வைத்துள்ளார். நான் எனது சொத்தில் பிரதிவாதி எவ்வித ஆக்கிரனமும் செய்யவில்லை என்றும், பிரதிவாதி ஆக்ரமணம் செய்யதாக பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 1998 ம் வருடம் கிரயம் வாங்கிய காலத்தில் இருந்து அந்த காம்பவுண்ட் உள்ளது என்றும், நான் இல்லை என்று தவறான தகவல்களுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.